**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

COS No. 141/2024
PW1 : Nilesh Kadel S/o. Sukhdevji Kadel
**10.04.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வட்டம் | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை தொடர்ச்சி**

என் தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 10.07.2023 தேதியிட்ட வாதி சௌத்திரி & சன்ஸ்-ன் கணக்கு அறிக்கை மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 65Bன் கீழான சான்றிதழுடன் **வா.த.சா.ஆ.12** வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்து, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

2. எனது பான் அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **வா.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**தாவாப்படி தீர்ப்பாகவேண்டுகிறேன்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி நிறுவனத்தில் நான் கணக்காளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு தொடுக்கும்போது சுந்தரமூர்த்தி என்னிடம் பவர் ஜெண்ட் தான் வழக்கு தொடுத்தார் என்றால் சரிதான். அவரும் வாதி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் இன்றைய தேதி வரை வாதி நிறுவனத்தில் தான் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு ரூபாய் 1,90,70,405/- பணம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் எவ்வளவு கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூபாய் 1,52,31,930/- என்றால்

சரிதான். பிரதிவாதி எவ்வளவு பணம் கட்டவேண்டும் அன்று அறுதியிட்டு கூறமுடியாது என்றால் சரியல்ல. எனக்கு தற்போது தெரியாது எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 1 ஆம் பிரதிவாதியின் நிறுவனம் பாலாஜி பிரிக்ஸ் முகவரி எனக்கு தெரியுமா என்றால் நாங்கள் லோன் கொடுத்த முகவரி தான் அதில் பாலாஜி பிரிக்ஸ் என்று போர்டு போட்ட ஒரு ரூம் உள்ளது. அந்த செங்கல் சேம்பர் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செங்கல் சூளைக்கு பெரிய அளவில் இடம் தேவைப்படும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2 ஆம் பிரதிவாதிக்கும் வாதிக்கும் இடையே உள்ள அடமான கடன் பத்திரம் தவிர வேறு ஏதாவது பரிவர்த்தனைகள் உள்ளதா என்றால் இல்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே அடமான கடன் பத்திரம் தவிர வேறு எந்த ஒப்பந்தமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி லோன் வாங்குவதற்காக 2 ஆம் பிரதிவாதிக்கும் தன்னுடைய 12 ஏக்கர் நிலத்தை அடமானம் வா.த.சா.ஆ.1 மூலம் வாதியிடம் அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.த.சா.ஆ.1 ல் நான் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.த.சா.ஆ.1 ன் படி அடமானம் வைக்கப்பட்ட நிலங்கள் காலி நிலங்கள் என்றால் சரிதான். அந்த காலி இடத்தில் நாங்கள் பாலாஜி பிரிக்ஸ் என்று போர்டு பார்த்தேன் என்றால் சரிதான். அந்த ரூமையும் போர்டையும் தவிர வேறு எதையும் அந்த இடத்தில் பார்க்கவில்லை என்றால் மண் குவித்து வைக்கப்பட்டிருந்தது. லோன் 2 ஆம் பிரதிவாதியால் அவர் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட அடமான கடன் என்றால் சரிதான். அதனால் எனக்கும் வர்த்தக ரீதியான பரிவர்த்தனை இல்லாதபோது வர்த்தக ரீதியாக வழக்கு தொடுப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. பிராதிலும், வர்த்தக ரீதியான வழக்கு என்பதற்கு சங்கதிகள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாதி நிறுவனம் Money Lending தொழில் செய்யும் நிறுவனம் என்றால் சரிதான். அவர்களுடைய குடும்ப தொழில் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார்கள்என்றால் சரிதான். ரூபாய் 75 லட்சம் 2 ஆம் பிரதிவாதிக்கு அடமான கடன் கொடுக்கும் போது அவருடைய பின்புலன்களை விசாரித்து தான் கடன் கொடுத்தோம் என்றால் சரிதான். வாதி Non Banking Financial Institution இல்லை என்றால் சரிதான். எந்த ஒரு தொழில் செய்தாலும் அரசாங்கத்திடம் அனுமதி வாங்கி தான் செய்ய வேண்டும் என்றால் சரிதான். நாங்களும்

வாதி நிறுவனம் அரசாங்கத்திடம் லைசன்ஸ் வாங்கி தான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எங்கள் நிறுவனத்தில் வழங்கப்பட்ட லோன் கார்டு என்றால் சரிதான். லோன் கொடுத்தபோது கொடுக்கப்பட்டது. லோன் கார்டின் படி 2 ஆம் பிரதிவாதி ரூபாய் 44,05,000/- கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் டிமாண்ட் நோட்டீஸ் எங்களால் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதன்படி 17-12-2018 அன்று கட்ட வேண்டிய தொகை ரூபாய் 17,60,000/- என்றால் சரிதான். 10-07-2017 அன்று ரூபாய் 75 லட்சத்திற்கு லோன் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். கடன் ஒப்பந்தத்தின் படி ஒவ்வொரு மாதமும் ரூபாய் 3,45,000/- EMI கட்டவேண்டும் என்றால் சரிதான். ஆகஸ்ட் மாதம் 2017 முதல் தவணை தொகை செலுத்த வேண்டும் என்றால் சரிதான். 10-07-2018, 12 மாத தவணைகளில் ரூபாய் 35 ஆயிரம் தான் பாக்கி என்றால் சரியல்ல. அது தட்டச்சு பிழையாகும். தற்போது என்னிடம் காட்டப்படும் 17-12-2018, 12-04-2019 ஆகிய தேதிகளில் அனுப்பப்பட்ட கடிதங்களில் 10-07-2018 அன்று ரூபாய் 35 ஆயிரம் தான் பாக்கி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் Copy, Paste செய்ததால் அதே தவறு ஏற்பட்டுள்ளது. 02-09-2020 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதிலும் 11 மாத தவணைகள் முழுமையாக செலுத்தப்பட்டுவிட்டது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 12 ஆம் தவணை தான் பாக்கி என்று கூறியுள்ளோம் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பும் எங்களுடைய 17-12-2018, 12-04-2019 Reminder Letter-ன் படி அனுப்பப்பட்டதால் அதே பிழை ஏற்பட்டுள்ளது. 11 தவணைகள் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தால் அதனுடைய கூட்டு தொகை ரூபாய் 37,95,000/- என்றால் சரிதான். 12 தவணைக்காக ரூபாய் 3,10,000/- கட்டியிருப்பதாக 17-12-2018, 12-04-2019 Reminder Letter-ன் படி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தின் பிரகாரம் அவ்வாறு தான் உள்ளது. வாதி தரப்பு ஆவணங்களின் படி 2 ஆம் பிரதிவாதி 10-12-2018 அன்று மொத்தமாக ரூபாய் 41,05,000/- கட்டியுள்ளார் என்றால் ஆவணத்தின் பிரகாரம் அவ்வாறு தான் உள்ளது. 17-11-2020 அன்று 2 ஆம் பிரதிவாதி மற்றொரு ரூபாய் 3 லட்சம் பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அதனால் 2 ஆம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ரூபாய் 44,05,000/- செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி

வாதி கோரியுள்ள தொகையை நிர்ணயம் செய்ய எந்த ஒரு கணக்கீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளோம். ரூபாய் 44,05,000/— கழித்து விட்டு 2 ஆம் பிரதிவாதி மீதி பணத்தை கட்ட தயாராக உள்ளார் என்றாலும் அதை வாங்க நாங்க தயாராக இல்லை என்றால் அடமான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சரத்துக்களின் படி நான் பணத்தை பெற தயாராக உள்ளோம். Money Lending Act ன்படி வாதி நிறுவனம் லைசன்ஸ் பெற்றுள்ளது என்றால் சரிதான். Money Lending Act ல் குறிப்பிட்டுள்ள வட்டி சதவிகிதத்தை விட அதிக வட்டி பெற முடியாது என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி அடமான கடனுக்காக தான் செலுத்திய தொகையை கழித்து மீதமுள்ள தொகையை செலுத்த தயாராக உள்ளார் என்றாலும் அதை நாங்கள் வாங்க தயாராக இல்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய வாதுரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் கோரியுள்ள தொகையானது அதிகப்படியானது மற்றும் Money Lending Act க்கு விரோதமானது என்றாலும் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் அடமான கடன் பெற்றதால் அவர் தனிப்பட்ட முறையில் பணத்தை திரும்ப கொடுக்க காசோலையை கொடுத்தார் என்றால் சரிதான். அப்போது கொடுக்கப்பட்ட 2 காசோலைகள் Dishonour ஆனதால் நாங்கள் அவர் மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. எதிர் உரையில் கூறப்பட்ட தொகையின் படி 2 ஆம் பிரதிவாதி பணத்தை கொடுக்க தயாராக உள்ளார் அதை நாங்கள் பெறுவதற்கு நாங்கள் தயாராக இல்லை என்றால் அடமான கடன் பத்திரத்தின் சரத்துக்களின் படி நான் பணம் பெற தயாராக உள்ளேன்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.